7th March 1963]

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) The work will be started as soon as the estimates are sanctioned.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64—*cont.*

* திரு. மு. கருணாநிதி : *தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு* செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவது தான் நல்லது என்று கருதுகிறேன். காரணம், எதிர்ப்பதாக ஆரம்பத்தில் சொல்லிவிட்டு ஏழெட்டு குறைபாடுகளை எடுத்துக் காட்டினாலும் அதை ஆளுங்கட்சியினர் எதிர்க்கவே தொடங்குகிறார்கள். ஆரம்பத்தில் ஆதரிப்பதாகச் சொல்லிவிட்டு ஆயிரம் குறைபாடுகளைச் சொன்னாலும் அதை இந்த மன்றத்தில் ஆதரிப்பதாகவே எடுத்துக்கொள்கிற காரணத்தினால் இதை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவதே நல்லது என்று கருதுகிறேன். (கனம் திரு. எம். பக்தவத்சலம் : முடிவில் நிராகரிக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள்.)

இதை வரவேற்பதற்கு இன்னொரு காரணத்தையும் கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறக்குறைய பதின்மூன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படிப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எத்தனை வற்புறுத்தி எடுத்துச் சொன்னாலும், எந்தக் கொள்கை வாதங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தாலும், அவை அத்தனையையும் ஆட்சியாளர் நிராகரித்துவிட்டு தங்கள் இஷ்டம்போல் தயாரித்து அளிப்பதனால் இன்றைய நாட்டு மக்கள் ஆட்சியாளர்களுடைய கொடுமையைப் புரிந்துகொண்டு தாங்கள் செய்த தவறை உணர்வார்கள் என்ற காரணத்திற்காக இதை நான் வரவேற்கிறேன் என்று சூசகமாகச் சொல்லக்கூடும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி இந்த மாமன்றத்திலே இரு தரப்பிலிருந்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தினுடைய இறுதி உறையில் குறிப்பிட்டிருக்கின்ற வாசகம் மிக மிக முக்கியமானது. இந்த நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் தொடக் கூடியது என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் மறுப்பதற்கில்லை.

"பாதுகாப்பு, அபிவிருத்தி, இந்த இரண்டு இலட்சியங்களுக்குள் முரண்பாடு ஒன்றுமில்லை. ஆனால் இவை இரண்டையும் ஒருங்கே அடையவேண்டுமென்றால் நம்முடைய ஆள் பலம், பொருள் பலம் எல்லாவற்றையும் திரட்ட வேண்டும்.

அப்படித் திரட்டுகையில் தியாகங்களைச் செய்யவேண்டி நேர்ந்தால், சுதந்திர நாட்டினர் என்ற முறையில் நாம் பின் வாங்கக் கூடாது"

என்று நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே எங்களைப் பொறுத்தவரையிலே வேறுபாடான கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. இந்தியாவினுடைய வட எல்லைப் பகுதியில் சீனாகள் நடத்துகின்ற ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக இநதியா போர்க்கொடி உயர்த்திய அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியத்தையே நிறுத்தி வைத்து விட்டு, இந்தப் போராட்டத்திற்கான ஆதரவை இந்திய சர்க்காருக்கு இதய சுத்தத்தோடு வழங்குவதற்குத் தீர்மானித்தது என்பதையும், அந்தத் தீர்மானத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் எள்ளளவும் பின் வாங்காமல் சீன ஆக்கிரமிப்பை முறியடிப்பது ஒன்றுதான் நம்முடைய முதல் வேலை என்பதை உணர்ந்து பணி புரிந்து வருகிறது என்பதையும் நான் மிகப் பெருமையோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உயிர்ப் பிரச்சனை இது. அந்தப் பிரச்னையில் நாம் எந்த அளவுக்கு நாட்டம் செலுத்தவேண்டும், எந்த அளவுக்குத் தியாகங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்த அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியதுதான்.

ஆனால் இதனைச் சற்றுச் சிந்திக்கிற நேரத்தில், "தியாகங்களைச் செய்கிறவர்கள் ஏழை மக்களாக மாத்திரந்தான் இருக்க வேண்டுமா? இந்தப் போரினால் ஏற்படுகின்ற சாதக பாதகங்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற முதலாளி வர்க்கத்தை தீண்டக் கூடாதா? பணக்காரர்களுடைய வீடுகளின் படிக்கட்டை மிதிக்கக்கூடாதா?" என்றுதான் கேட்க விரும்புகிறேன். நாட்டின் அபிவிருத்திக்குப் பொருள் தேவைப்படும். அந்தப் பொருளை ஈட்டுவதற்கு, வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிகளைக் காணவேண்டியதுதான். ஆனால் அதற்கான வழி காண்கின்ற நேரத்தில், அந்தப்பாரம் முழுவதும் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழைக் குடிமகனுடைய தலையிலே மட்டும் விழலாமா என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். 'இது வரி போடப்படாத வரவு-செலவுத் திட்டம் அல்லவா' என்று ஆளும் கட்சியைச் சார்ந்த அத்தனை உறுப்பினர்களும் எடுத்துப் பேசினார்கள். அது மாத்திரமல்ல. "வரி போடாத நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காரணத்தால் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குப் பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது; ஆகவே அவர்கள் 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்கள்'" என்று பேசினார்கள். பேசிய அத்தனை உறுப்பினர்களும் எதைச் சொல்லத் தவறினாலும் அந்தப் பழமொழியைத் தவறாமல், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் பேசிய மதிப்புக்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரி போட்

7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

டிருப்போமானால் அதுதான் கடைசி வரியாக இருக்கும்' என்று குறிப்பிட்டார்கள். அந்த வாசகத்திற்குப் பொருள் என்னவாக இருக்க முடியும்? 'போட வேண்டிய வரிகளையெல்லாம் போட்டாகிவிட்டது, இனிப் போடுவதற்கு வரி எதுவும் இல்லை' என்பதைத்தான் அது காட்டுகிறது. நாலைந்து தினங்களுக்கு முன்பாக நர்வரி, நிலவரி மசோதாவை நிறைவேற்றினோம். அந்த வரிகளின் சுமை ஏழைக் குடிமகனின் தலையிலே வழுந்திருக்கிறது. மத்திய சர்க்காருடைய வரித் திட்டங்கள் வேறு இந்த நாட்டுக் குடிமக்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. 'இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே வரி போட எங்கே இடம் இருக்கிறது? என்றுதான் கேட்க விரும்புகிறேன். அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவனுடைய உடலில் ஊசி குத்த கூட இடம் இல்லை என்று கூறுவது போல், எல்லா வரிகளும் இனறைய தினம் போடப்பட்டு இந்த நாட்டு மக்கள் பெருத்த வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 'வரி போட்டிருந்தால எதிர்க்கட்சிக்காரர்கள் பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கும், வரி போடாத காரணத்தால் அவர்களுடைய வாய் மூடிவிட்டது' என்று சொல்லும் ஆளும் கட்சியினருக்கு, கனம் மாதா கவுடர் அவர்கள் இந்த மன்றத்திலே வரியை எதிர்த்துப் பேசிய வாசகத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் தேதி தோட்ட வருமான வரி திருத்த மசோதா ஒன்று வந்தது. அந்த வரியை உயர்த்த எதிர்க்கட்சியிலிருந்து அத்தனை பேரும் எங்கள் ஆதரவை தெரிவித்தோம். அப்போது இந்த மன்றத்திலிருந்த சின்னதுரை அவர்கள்கூட, அந்த வரி 45 பைசா என்பதை 50 பைசா என்று ஆக்குவதில் கூடத் தவறில்லையென்று குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் நண்பர் மாதா கவுடர் அவர்கள் பேசிய வாசகம் எனக்கு நினைவிருக்கிறது. "நம்முடைய தொழில் முறையும், பிளான்டேஷனும் நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கும் ஊக்கம் கொடுக்கவேண்டும். ஊக்கம் கொடுத்தால்தான் அவர்களும் அந்தப் பயிர்களை நன்றாக விளைவிப்பார்கள். விளைபொருள்களை அந்நிய நாட்டுக்கு அனுப்பி அந்நியச் செலாவணிகூட ஓரளவுக்கு அதிகமாகப் பெறக் கூடும். அப்படி முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொழில் மீது ஒரேயடியாக அதிகமாக வரி போடுவதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன்" என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் ஜூலை மாதம் 25-ஆம் தேதியன்று இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார். எதிர்க்கட்சியில் இருக்கும் நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவராயினும், வேறு எந்த முற்போக்கு எதிர்க் கட்சியினராயினும், தாங்க முடியாதவர்கள் மீது சுமத்தப்படுகிற வரிச்சுமையைத்தான் எதிர்த்து வந்திருக்கிறோமே தவிர, தாங்கக் கூடியவர்கள் மீது போடப்படுகின்ற வரிகளை ஆட்சேபிப்பது கிடையாது என்பதைதான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் 'வரியே இல்லை' என்று சொல்லும் நேரத்தில், இதிலே மகிழ்ச்சி தரக்கூடிய வேறு என்ன இருக்கிறது? தினந்தோறும் மனைவியை அடித்து நொறுக்கிக்

[திரு. மு. கருணாநிதி] [7th March 1963

கொண்டிருக்கும் கணவன், ஒரு நாள்—'இன்றையதினம் உன்னை அடிக்கப்போவதில்லை' என்று மனைவியைப் பார்த்து கணவன் கூற, 'என் மீது அவ்வளவு காதலா பிறந்து விட்டது' என்று மனைவி கேட்க 'இல்லை! இல்லை! உன்னை அடித்து அடித்து என் கை வலி எடுத்து விட்டது' என்று பதில் கூறினாராம். அதைப் போலத் தான், வரி போட வழி இல்லாத அளவுக்கு ஏற்கனவே எல்லா வரி களையும் போட்டுவிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த வரவு செலவுத் திட்டத்திலே புதிய வரிகளைப் போட முடியவில்லை. நாட்டிலே, வாடுகின்ற மக்கள் வாடிக் கொண்டுதான் இருக் கிறார்கள். வரிப் பளுவை தாங்கிக் கொண்டிருக்கக் கூடிய மக்கள், 'சுமை இறக்கப்படாதா?' என்று சோகத்தோடு பெருமூச்சு விட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ரஷ்யத் தலைவர் குருஷேவ் அவர்கள் இந்தியா வந்திருந்த நேரத்தில் மிக அழகாகக் குறிப்பிட்டார்கள்.

"சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய மனிதனுடைய தலையாய உரிமையானது,

வேலை செய்யவும், இன்றைக்கும் நாளைக்கும் பாதுகாப்பான வாழ்வைப் பெறவும், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய பயங்கரப் பயமுறுத்தல்களிலிருந்து விடுதலை பெறவும் உள்ள உரிமையேயாகும்.

தொழிற்சாலைகள், மில்கள், பாங்குகள், வீடுகள், நிலம், இயற்கைச் செல்வாதாரம் முதலிய உற்பத்திச் சாதனங்கள் அனைத் தையும் தம்முடைய கையில் வைத்துக் கொண்டு கொழுக்கின்றவர் களின் சுரண்டலில் இருந்து மனிதன் விடுதலை பெறுவதுதான் தனி நபர் சுதந்திரத்தின் மிக உயர்வான வடிவமாகும்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே இந்த நாட்டிலே வரவு செலவுத் திட்டம் தீட்டப்படுகிறதா? வருமானத் தைப் பெருக்குவதற்கு வரிகளை மாத்திரம் நம்பினால் போதுமா? தொழில்களைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று நாங்கள் எடுத் துக் கூறுகின்ற கருத்தை இந்த அரசு ஏன் கவனிக்க மறுக்கிறது? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் கூட, தனியார் துறை, பொதுத்துறைக் கணக்கினை ஆராய்ந்து பார்த் தால்,—பொதுத்துறையில், நெய்வேலித் திட்டம், கிண்டி டெலி பிரிண்டர் தொழிற்சாலை, நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை, கனரக கொதிகலன் தொழிற்சாலை, ஆவடிக்கருகில் பாதுகாப்புச் சாதனத் தொழிற்சாலை ஆகியவைகள்தான் வருகின்றன. ஆனால் தனியார் துறையிலோ,—சேலம் மாவட்டத்தில் கலவை உருக்குத் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைக்கான இயந்திரங்கள் தயாரிக்க இரண்டு தொழிற்சாலைகள், சோடாக்காரம் மற்ற ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் தாரங்கதாரா ஸ்தாபனம் (அதற் காகவே) மேட்டூர் கெமிக்கல் ஸ்தாபனம், எண்ணூர் உரத் தொழிற் சாலை, கடலூர் உரத் தொழிற்சாலை, கோவை உரத் தொழிற்சாலை, பாரி ஸ்தாபனத்தின் 'அம்மோனியம் பாஸ்பேட்' உற்பத்தித் தொழிற்சாலை, சேஷசாயி காகிதத் தொழிற்சாலை, சங்கரிதுர்கம்

7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

சிமெண்டு தொழிற்சாலை, கரூர் சிமெண்டு தொழிற்சாலை, விஸ்கோஸ் ஸ்தாபனத்தின் 'ரயான்' தொழிற்சாலை என்ற அளவில் தனியார் துறை விரிவுபடுத்தப்படுகிறது. இதிலே எங்கே ஆவடி சோஷலிசம்' இருக்கிறது? இப்படிப்பட்ட கலப்பட சமதர்மத்தால் ஏழைக் குடிமகனுடைய வாழ்விலே ஒளியை உண்டாக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் பெருத்த லாபம் அடைந்து வரக் கூடிய பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று நாங்கள் சொன்னால், அதிலே ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? ஏறத்தாழ ஐயாயிரம் பஸ்களை நிர்வகிக்கின்ற 200-க்கு மேற்பட்ட மோட்டார் மன்னர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பஸ் போக்குவரத்தை எடுத்து தேசிய மயமாக்கினால் என்ன? 'எனக்கு மட்டும் அதிகாரம் இருக்கிறது எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்'—நான் சொன்னதாகச் சிரிக்க வேண்டாம், சொன்னது நான் அல்ல. 'எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்' என்று சொன்னது யார்? அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொருளாதாரக் கூட்டத்தில் பிப்ரவரி மாதம் 26-ம் தேதி யன்று பேசியவர் சர். சி. பி. ராமசாமி அய்யர் ஆவார்கள். ஏன் இந்த யோசனையை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது? திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யவேண்டுமென்கிற அவரது யோசனையை மாத்திரம் ஏற்றுக் கொள்ளுகின்ற நீங்கள் ஏன் இந்த யோசனையையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

ஏன் பஸ் தொழிலை தேசியமயமாக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் நேற்றையதினம் நான் பார்த்த செய்தி ஒன்றை நான் இத்துடன் இணைக்க விரும்புகிறேன். சென்னை மாநகரில் டாக்சிகளை 50 வாடகை கார்களை ஒரு தனிப்பட்ட முதலாளி ஸ்தாபனத்தினிடம் கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதிப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கீவராஜ் மோட்டார் ஸ்தாபனத்திற்கு 50 வாடகைக் கார்களைத் தருகிறோம் என்று அனுமதி அளித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இன்றைய தினம் சென்னை மாநகரில் டாக்சிகளை வைத்துக் கொண்டு வாடகைக்கு விட்டுக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும சிறிய, நடுத்தர நிலையில் உள்ளவர்கள்தான். அவர்கள்தான் இந்த வாடகைக் கார்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரேயடியாக இந்த டாக்சிகளை தேசியமயமாக்குவதைப் பற்றி நான் ஆட்சேபனை செய்யவில்லை. அதுவரையில் இந்த சிறிய, நடுத்தர வாடகைக் கார்கள் சொந்தக்காரர்களை பாதிக்காத அளவிற்கு இந்த 50, 100 என்று வாடகைக் கார்களை தனிப்பட்ட இந்த கீவராஜ் போன்ற ஸ்தாபனங்களிடம் தராமல் இருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். என்ன நிபந்தனையோடு அவர்கள் இப்படி கொடுக்கப் போகிறார்கள் என்று நான் கேள்விப்படுவது, சென்னை டாக்சி ட்ரைவர்கள் ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்தால் அந்த நேரத்தில் இந்த ஸ்தாபனத்தின் வாடகைக் கார்கள் எல்லாம் எங்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்பதுதான். சுருங்கச் சொன்னால் கருங்காலி வேலை செய்யவேண்டுமென்ற நிபந்தனை மீது இந்த 9-30 a.m.

அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டு மெத்த வருத்தம் அடைகிறேன். ட்ரைவர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்துகிற போராட்டங்களைக் கூட வீழ்த்துவதற்கும், உடைப்பதற்கும், முறியடிப்பதற்கும் இந்த முறை பயன்படுமா அல்லவா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அடுத்து ஒரு நாட்டின் நல்வாழ்விற்காக விவசாயம் வளர்ச்சி, விவசாய தொழில் துறை முன்னேற்றம் இவைகள் இன்றியமையாதவை என்பது ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தாலும், அதை நாட்டிலுள்ள எல்லா தரப்புக் கட்சிகளில் இருப்பவர்களும் ஒப்புக் கொண்டபோதிலும் அது செயல் படும் விதத்தில் இருக்கிற மாற்றங்களை, முரண்பாடுகளை நான் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜப்பான் நாட்டில், ஏறத்தாழ 60 லட்சம் விவசாயிகளைக் கொண்ட அந்த நாட்டில், விவசாயத் துறையில் ஏற்பட்டிருக்கிற வேகத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது அமெரிக்காவையும் ரஷ்யாவையும் ஒப்பிட்ட நேரத்தில் இன்னொரு நாட்டோடு ஒப்பிடலாமா என்ற கேள்வி எழுந்தது. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையை ஆராயும்போது உலகத்திலுள்ள இதர நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதுதான் திட்டங்களின் வளர்ச்சிக்கு நல்ல இலக்கணமாக இருக்க முடியும். அந்த இலக்கண அடிப்படையில் வேறு நாடுகளில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிகளை நாம் காண வேண்டும். அப்படி கண்ட பிறகு அது குறித்து நாம் வருந்தவோ அல்லது தாழ்ந்திருக்கிறோம் என்று வருத்தப்படவோ வேண்டுமென்று சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், அந்த வளர்ச்சியைக் கண்டு அதை எட்டிப் பிடிக்க நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றுதான் பிற நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். விவசாயத்தைப் பெருக்க அரசாங்கம் பல விதங்களில் முயற்சி செய்கிறது என்று குறிப்பிட்டாலும், நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் செயல்முறை தாமதமாகவும், நியமுறையிலும் நடந்து வருகின்றது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. விவசாயத்திற்குத் தேவையான உரம், ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல், நியாய விலையில் கிடைப்பதில்லை, காலத்தில் வந்து சேருவதும் இல்லை. பொறுக்குவிதை சர்க்காரால் வினியோகிக்கப்படுவதைவிட கிராம சகாயக்குகளால் வினியோகிக்கப்படுவதை விட, தனிப்பட்ட விவசாயிகளே வினியோகித்தால் நல்லமுறையில் இருக்கும் என்று ஆளும் கட்சியைச் சார்ந்த தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் இந்த மன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் எடுத்துரைத்தார்கள். இது சர்க்காரால் வினியோகிக்கப்படவேண்டாம் என்பதற்காக நான் சொல்லவில்லை, வினியோகிக்கப்படுகிற இந்த முறை ஒழுங்கான முறையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கிராம சகாயக்குகள் பொறுக்குவிதைகளைப் பெருக்கித் தயாரிப்பதில் போதுமான பயிற்சி பெற்றவர்கள் அல்ல. அதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன். இன்று பல இடங்களில் பொறுக்குவிதை போடுவதால் ஏற்கனவே வயலில்

7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

பயிரிடும்போது ஏற்படுகிற களையை விட அதிகமான களை உற்பத்தியாவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்படுகிற வாதமாக இதை எடுத்துக் கொள்ளாமல் பிரத்தியட்ச நிலையை இந்த மன்ற அங்கத்தினர்களும், அமைச்சரவையும் உணர்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன். அனுபவப் பயிற்சி பெறாத கிராம சகாயக்குகளால் இந்த ஆபத்து நேரிடுகிறது என்பதையும் அதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கும் தொல்லை ஏற்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. விஞ்ஞான முறைப்படி பொறுக்குவிதை தயாரித்தால் போதும் என்று கருதுவது நல்லதல்ல. அனுபவமும் தேவை பி.ஏ. அல்லது எம்.ஏ. படித்த ஒரு பெண்ணை, சமையல் வேலை தெரியாத அந்தப் பெண்ணை, சமையல் கட்டுக்கு அனுப்பி சமையல் செய் என்று சொன்னால், அப்பெண் விஞ்ஞானமுறையில், சுகாதார முறைப்படி சமைக்க வேண்டுமென்று நினைத்து கத்தரிக்காயையும், வெண்டைக்காயையும் சோப் போட்டுக் கழுவி குழம்பு வைத்தால் அந்தக் குழம்பு எப்படியிருக்குமோ, அதேபோன்று அனுபவம் பெறாத கிராமசகாயக்குகளால் தயாரிக்கப்படுகிற பொறுக்குவிதைகளைப் போட்டு விவசாயிகள் நல்ல விளைச்சலை காணமுடியாதிருக்கிறது. அடுத்து பழத்தோட்டம் என்ற முறை இருக்கிறது. இந்தப் பழத்தோட்டங்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நான் வட ஆற்காடுக்கு செல்கிற வழியில் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகாமையில், கேட்டை அடிக்கடி மூடுவதால் காரை நிறுத்த வேண்டி வருகிறது. அதன் பக்கத்தில் பழத்தோட்டம் என்று அழகான, கவர்ச்சிகரமான பலகை தொங்கிக்கொண்டிருக்கிறது. காரை விட்டு இறங்கி பழத் தோட்டம் எங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்தால் அதைக்காணவில்லை. அந்தப் பழத்தோட்டம், மாயப் பழத் தோட்டம் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகில் இருக்கிறது. அங்கு போர்ட் மட்டும் இருக்கிறது, ஐந்தாறு குழிகள்தான் அங்கு இருக்கின்றன. அங்கு பழத்தையும் காணவில்லை, தோட்டத்தையும் காணவில்லை, செடிகளையும் காணவில்லை. நான் இந்த முறையைக் கண்டிக்கவில்லை, நோக்கத்தை கண்டிக்கவில்லை. ஆனால் அது செயல்படுகிற விதத்தில் ஏற்படுகிற முரண்பாடுகளைத்தான் தவறுதல்களைத்தான் நான் இங்கு சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். தேனீப் பண்ணை என்ற பெயரால் 6,000 ரூபாய் வரையில் பஞ்சாயத்து யூனியன் மூலம் செலவிடப்படுகிறது. ஆனால் இப்பணம் ஒழுங்காகச் செலவிடப்படுகிறதா என்ற கண்காணிப்பு இருக்க வேண்டும். நோக்கத்தை நான் குறை கூறவில்லை என்பதை நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். செயல்முறையில் ஏற்படுகிற தவறுதல்களைத்தான் நான் எடுத்துக் காட்டுகிறேன். கண்காணிப்பு நல்லமுறையில் இருக்கவேண்டும். விவசாயத் துறையில் நல்ல முறையில் விளைவு காண, இசை மூலம் விவசாயத்தில் நல்ல விளைச்சலைக் காணமுடியும் என்ற ஆராய்ச்சி 1950-ம் ஆண்டு முதல் இந்த பரிதாபத்திற்குரிய தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது.

ஆனால் இது பற்றி நேற்றைய தினம் விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டபோது "எனக்கு அது தெரியாது நான் அதைப் பார்த்ததில்லை" என்று சொல்லுகிறார். அது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இதைக் கூடப்பார்க்காதவர் விவசாய அமைச்சராக இருக்கிறாரே என்பதற்காக அல்ல. கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதுகூடத் தெரியவில்லையே என்பதற்காக நான் உள்ளபடியே ஆச்சரியப்படுகிறேன். அதற்கான ஆதாரங்களை கனம் அமைச்சர் அவர்களிடம் தருவதற்காக இதை நான் எடுத்துக் கொண்டு வந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டி. ஸி. எஸ். சிங் என்ற ஒரு வட நாட்டுக்காரர் இருக்கிறார்—தனிப்பட்டவர் மீது எங்களுக்கு துவேஷம் இல்லை என்பதற்கு இது ஒரு சான்று—அவர் தாவர ஆராய்ச்சி இலாகாவின் தலைவராக இருக்கிறார். அவர் கண்டு பிடித்த ஆராய்ச்சியின் சில விவரங்களை நான் இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். 1950 டிசம்பரில் இருந்து அண்ணாமலை சர்வகலாசாலையில் சோதனை நடைபெற்று வருகிறது. நாதசுவரத்தில் சாருகேசி ராகத்தை ஒலிபரப்புவதன் மூலம் 25 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதம் வரை நெல் அதிக உற்பத்தி கிடைத்திருக்கிறது. அதே விதத்திலே வேர்கடலை உற்பத்தி 45 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. கானடா நாட்டில் ஒன்டேரியோ என்ற இடத்தில் வயலின் மூலம் ஐரோப்பிய சங்கீதத்தை ஒலிபரப்பியதில் கோதுமை உற்பத்தி 66 சதவிகிதம் அதிகமாயிருக்கிறது. புகையிலை கன்றுகளின் உற்பத்தியில் 50 சத விகிதம் முதல் 60 சதவிகிதம் வரையில் அதிக விளைச்சல் கிடைத்திருக்கிறது. வரப்பிற்கு ஒரு அடி உயரத்தில் ஒலிபெருக்கி பொருத்தி தினசரி காலை 6 லிருந்து 7 மணிக்கு இடையில் அரை மணி நேரம் இசை ஒலி பரப்பப்பட்டது. காற்றுவீசும் திசை நோக்கி பொதுவாக ஒலிபெருக்கி அமைக்கப்படும். மண் சோதனை நடத்தி ஒரே மாதிரி தரமுள்ள இரு நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றில் இசை ஒலிபரப்பு பயிர்கள் வளர்க்கப்பட்டன. அது இல்லாது இன்னொன்றில் வளர்க்கப்பட்டன. இரண்டிலும் ஒரே மாதிரி உரங்கள் ஒரே அளவில் ஒரே நாளில் போடப்பட்டன. பாண்டிச்சேரி மாநிலத்தில் அரசினர், நிலச் சொந்தக்காரர்கள் உதவியுடன் கீழ்க்கண்ட இடங்களில் நெற்பயிர் மீது சோதனை நடத்தினர். கீழ்காதமங்கலம், ராமநாதபுரம், இருளஞ்சாந்தி, கரிகாலம்பாக்கம், கவலிக்குப்பம், தைனார் மண்டபம். இதில் விளைவு, நெல் உற்பத்தியில் 8 சதவிகிதத்தில் இருந்து 57 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்திருக்கிறது. வைக்கோல் அறுவடையில் 10 சதவிகிதம் முதல் 83 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்துள்ளது. கீமக்காதமங்கலத்தில் இசையால் ஊக்குவிக்கப்பட்ட குதிரைவாலி சம்பா பயிர் அது இல்லாத பயிரைவிட 5.48 அங்குலம் அதிகம் உயர்ந்திருக்கிறது. இப்படி பல்வேறு விவரங்கள் நிறைய என்னிடம் இருக்கின்றன. கனம் நிதியமைச்சர் விரும்பினால் இதைத்தர நான் தயாராயிருக்கிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதில் அக்

7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

கரை இல்லையோ அல்லது அதைக் காண தவறி விட்டார்களோ என்னவோ காரணம் எனக்கு புரியவில்லை. இந்த அளவுக்கு நெல்லில் மட்டுமல்ல, கரும்பில்கூட, உருவையாறு என்ற கிராமத்தில் பயிர் நாலரை மாதம் வளர்ந்த பிறகு அறுவை காலம் வரை நாதஸ்வரத்தில் சாருகேசி ராகம் இசைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு ஏக்கருக்கு 8 டன் அதிகமாக விளைந்திருக்கிறது. இம்மாதிரி நாதஸ்வர இசையின் மூலமாக விளைச்சலைப் பெருக்க முடியும் என்பதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட ஆராய்சியாளரைப்பற்றி வட ஐரோப்பாவில் முக்கியத்துவம் வாய்ந்ததும், நார்வே நாட்டு மிகப் பெரிய தினசரியான "ஆஃப்தன் போஸ்டன்" என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் இந்த இந்திய விஞ்ஞானியை மனித சமுதாயத்திற்கு உபகாரம் செய்தவராகக் கருதி அவருக்கு நோபல் பரிசு உரித்தாக்குவதற்கும் சாத்தியம் இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட செல்வாக்குமிக்க அந்தப் பத்திரிகையில் இக்கட்டுரை வெளியாகியிருப்பதால் நோபல் கமிட்டி இதைப்பற்றி சிந்திப்பதற்கும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. பாண்டிச்சேரி அரசின் விவசாய இலாகா கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறது. மேலும் ஆராய்ச்சியாளர் டி. சி. எஸ். சிங்கிற்கு 1955-ம் ஆண்டு பிருத்வி டிரஸ்ட், பிருத்வி பரிசை வழங்கியிருக்கிறது. அதாவது 2,000 ரூபாயையும் ஒரு தங்க மெடலும் 'டீன் ஆஃப் பிலாசபி' என்ற பட்டமும் வழங்கியிருக்கிறது.

இதே ஆராய்ச்சியாளர் அவர்கள், இந்திய அரசு இதை மேற்கொள்ளவேண்டும் என்று நேருவிற்கு கடிதம் எழுதினார். இதை மேற்கொள்வதில் பல சிரமங்கள் இருக்கலாம் என்றும், இதற்கான முயற்சிக்கு விவசாய இலாகாவை அணுகவேண்டும் என்றும் நேரு கடிதம் எழுதிவிட்டார். ஆனால் நம்முடைய விவசாய இலாகாவினர் இது குறித்து எந்தவிதமான அக்கரையும் காட்டவில்லை. எப்படி காட்ட முடியும்? நம்முடைய விவசாய மந்திரிக்குத்தான் இப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சி நடப்பதாகவே தெரியாதே. இனி மேலாவது இதில் அக்கரை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கனம் திரு. கே. காமராஜ்: இசையில் மந்திரி கவனம் செலுத்தவில்லை, விவசாயத்தில் தான் கவனம் செலுத்தி வருகிறார்கள்.) இசைக்கும் விவசாயத்திற்கும் இசைந்த தொடர்பு இருக்கிறது என்றுதான் குறிப்பிடுகிறேன். விவசாயத்துறையில் மட்டும் அல்ல, தொழில் துறையிலும் நாம் எந்த அளவுக்கு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இந்த நாட்டிலே எழுந்த பெருத்த முழக்கத்திற்குப் பிறகு ஆளும் கட்சியினரின் திருப்திக்காக வேண்டுமென்றால் பெருத்த கூச்சலுக்குப் பிறகு என்று சொல்லுகிறேன்—பெரிய கூச்சலுக்குப் பிறகு இந்த நாட்டில் ஒன்றிரண்டு தொழிற் சாலைகள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன. அந்த அளவில் ஒன்றிரண்டு திட்டங்கள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன.

சேலம் உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவது 1938-வது ஆண்டி லிருந்தே ஆராய்ச்சியில் தான் இருந்து வருகிறது. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம் இந்தத் திட்டங்கள் எல்லாம் இதில் இடம் பெறாத நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ ஐநூறு மைலுக்கு மேல் இலங்கையை சுற்றிச் செல்லுகின்ற அனு வசியமான பயணத்தை தூத்துக்குடிக்குச் செல்லுகின்ற கப்பல் கள் தவிர்க்க முடியும். இப்படிப்பட்ட திட்டம் இதில் இடம் பெற வில்லை. முக்கியமாக நாம் எந்த அளவுக்குத் தொழில் துறையில் பின்தங்கியிருக்கிறோம் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நான் எடுத்துச் சொல்ல வில்லை, ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். 1958-59-ம் ஆண்டு கணக்குப்படி சர்க்கரை உற்பத்தி, பீகாரில் 311 ஆயிரம் டன்னுகவும் பம்பாயில் 321 ஆயிரம் டன்னுக வும், உத்திர பிரதேசத்தில் 888 ஆயிரம் டன்னுகவும், தமிழகத்தில் 74 ஆயிரம் டன்னுகவும் இருக்கிறது. இப்போது வேண்டுமென்றால் சிறிதளவு ஏறியிருக்கலாம். ஆனால் நான் முக்கியமாக குறிப்பிட விரும்புவது "தென்இந்தியா, பம்பாய், இவைகளைப்போல உத்திர பிரதேசம், பீகார், ஆகிய மாநிலங்கள் கரும்பு விளைச்சலுக்கு ஏற்ற வை அல்ல. எனினும் பல ஆலைகள் அங்கு நிலைத்துவிட்டன" என்று 'இந்தியப் பொருளியல்' என்ற புத்தகத்தில் 196-வது பக் கத்தில் டாக்டர் பா. நடராஜன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member has already taken 25 minutes.

திரு. மு. கருணாநிதி: இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

MR. SPEAKER: Then it will be against the rules and regulations. இரண்டு நிமிடங்கள் தான் இனி கொடுக்கமுடியும். அதற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. மு. கருணாநிதி: மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். "பம்பாயில் பஞ்சாலைத் தொழிலும், உத்திரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் சர்க்கரை தொழில்களும், வங்கத்தில் சணல் தொழிலும், வங்கம், பீகார் மாநிலங்களில் நிலக்கரிச் சுரங்கங்களும் செழித்துள்ளன. இவ்வாறு ஒரே தொழில் ஓரிடத்தில் செழிப்புறுவதால், அத் தொழிலில் ஏற்படும் தளர்வு அங்குள்ள மக்களை அல்லற்படுத்தும். ஓரிடத்திலேயே ஏற்படும் தொழிற்செறிவால் ஏனைய மாநிலங்கள் புறக்கணிக்கப்படலாம். அத்துடன் தொழில்கள் ஓரிடத்தில் திரண்டு செறிவதால் போர்க்காலத்தில் அப்பகுதிகள் அழிக்கப் படும்போது நாடே அவதியுறும்" என்று டாக்டர் பா. நடராஜன் அவர்கள் "இந்தியப் பொருளியல்" என்ற புத்தகத்தில் 174-வது

7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முக்கியத்துவத்தை கருதியாவது இந்தத் தொழில் நிலையங்கள் எல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருப்பது அபாயகரமானது என்பதை உணர்ந்து, பின் தங்கிய இடங்களில் முதன்மையாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்திற்கு நல்ல பல பெரிய திட்டங்களை இந்திய அரசினிடமிருந்து நமது அமைச்சர்கள் போராடிப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது எற்கனவே நான்கு கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய தொகை வெட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரி வெட்டப்பட்ட தொகைகளை துணிச்சலாக கேட்டுப் பெற வேண்டும். மேற்கு வங்காளத்தில் சங்கர்தாஸ் பானர்ஜி அவர்கள் மத்திய அரசாங்கத்தை கண்டித்து எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நியாயமான பல வரிப் பங்குகளை கொடுக்காமல் இருப்பது நியாயமா என்று கேட்டு போர்க் குரல் எழுப்பியிருக்கிறார்கள். காலஞ் சென்ற திரு. பி.ஸி. ராய் அவர்கள் தங்கள் மாநில கோரிக்கையை எடுத்துக்கூறுகின்ற நேரத்தில் எங்களுடைய திட்டத்தை நாங்களே வகுத்துக் கொள்கிறோம், அதைப்பற்றி திட்டக் குழுவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, எங்கள் நாட்டில் செய்ய வேண்டியதை நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று போர்க் குரல் கொடுத்திருக்கிறார்கள். அத்தகைய துணிச்சலை நம்முடைய அமைச்சர்கள் பெற வேண்டும். நம்முடைய அமைச்சர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால், வெளியில் 10, 20 பயில்வான்களை அடித்து விழ்த்திவிட்டு, விட்டுக்கு வந்தவுடன், "பெண்டாட்டி தாயே, பெரிய தாயே!" என்று சரணடைகிற பயில்வானைப் போலத் தான், நமது அமைச்சர்கள், என்னைப்பார்த்து "உங்களை ஒழித்துவிடுகிறோம் பாருங்கள்" என்று உறுமுகிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரிடத்தில், டெல்லி சர்க்காரிடத்தில் போய் மட்டும், வெளியில் குத்துச்சண்டையெல்லாம் போட்டுவிட்டு விட்டுக்குப் போனவுடன் வேறு விதமாக நடந்துகொள்ளும் பயில்வானைப் போல் நடந்து கொள்கிறார்கள். இந்நிலை நமது அமைச்சர்களுக்கு மாறவேண்டும் என்றும், டெல்லி சர்க்காரிடத்தில் நமது கோரிக்கைகளை துணிச்சலாக கேட்டுப்பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு சொல்லொணாத அவதிக்கு ஆளாகியிருக்கின்ற பொற்கொல்லர்களின் நிலைமையை ஆராய்ந்து, வேலையற்றிருக்கின்ற இவர்களுக்கு வேலை தேடித்தருவதற்கு இந்த மாமன்றத்தில் கொலுவீற்றிருக்கின்ற மந்திரிகள் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். பொற்கொல்லர்கள் இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஆற்றில் மிதந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நீந்தத் தெரியாது, நீச்சல் பழக்கம் இல்லாதவர்கள், அவர்களைக்காப்பாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கனம் காமராஜ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை தொடர்ந்து வாசித்துக்கொண்டு வருகிறேன். அவர் இளம் வயதினராக இருக்கும்

போது, அவருடைய நண்பர் ஒருவரை நீந்தக் கற்றுக் கொடுப்பதற்காக நீந்து நீந்து என்று சொன்னாராம், அந்த நண்பர் மறுக்கவே பக்கத்திலுள்ள ஆற்றில் பிடித்து தள்ளி விட்டாராம், பின்னால் ஆற்றில் நீந்தத் தெரியாமல் நண்பர் உயிருக்கு மன்றாடித் திணறித் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது அந்த நண்பரை, கனம் காமராஜ் அவர்கள் கரைக்கு ஏற்றினாராம். கரையேற்றி காப்பாற்றிய இந்த நிகழ்ச்சியைப்படித்து நான் மெத்த சுவைத்தேன். அந்த முறையில் இன்று வேறு வேலைகள் எதுவும் தெரியாத இந்தப் பொற்கொல்லர்களை நட்டாற்றில் பிடித்து தள்ளியிருக்கிறீர்கள். அன்று ஆற்றில் தள்ளிவிட்டு பிறகு நண்பரை கரையேற்றியது போல் இவர்களையும் காப்பாற்றுகின்ற வகையில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து உதவி செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத்தகைய சந்தர்ப்பத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதையும், வரவேற்கத் கூடிய பாக்கியம் நமக்கு கிட்டவில்லையே என்ற வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன், போற்றுகிறேன், பாராட்டுகின்றேன். அத்தனைக்கும் அது பொருந்தும் என்பதை நான் தைரியமாக கூறிக்கொள்ள முடியும். அந்த விதத்தில் நமக்கு இருக்கின்ற நிதி வசதிகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, அதில் ஏற்படுகின்ற செலவினங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி பற்றுக்குறை எந்த அளவுக்கு ஏற்படுகிறது என்பதை எடுத்துச்சொல்லி—"மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்"— என்ற வாக்கின் படி நம்முடைய பற்றுக்குறைகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, இந்தப் பற்றுக் குறையைப் போக்க, வரவு இனங்களையும் எடுத்துச்சொல்லி இறுதியில் வரி எதுவுமில்லை என்ற இனிப்பான செய்தியையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த முறையில் அமைந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை மிகவும் போற்றுதற்குரிய ஒரு விருந்து என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். வரி போட்டால் எதிர்க் கட்சியினர் எதிர்ப்பார்களே, அல்லது வரி போட்டால் எதிர்க் கட்சியினர் ஆதரிக்கமாட்டார்களே என்ற பயத்தால் அமைச்சர் அவர்கள் வரி போடாமல் இருக்கவில்லை. எந்த விதத்தில் வரிகளைப் போட வேண்டும், எப்போது போட வேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு அமைச்சர்களுடையது. இதை எதிர்க்கவும், ஆதரிக்கவும் இந்த சபைக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த சபை வரி கொண்டு வந்தால் ஆதரிக்காமல் விட்டுவிடுமே என்ற எண்ணத்துடன்—அந்த பயத்திடன்----வரி போடாமல் இல்லை. அப்படி எண்ணியிருந்தால் எப்பொழுதுமே எந்தவிதமான வரிகளும் இல்லாமல் நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்திருக்கலாம். அதற்கு அவர்கள் அஞ்சவில்லை. ஆளும் கட்சி